8th September 1970]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ரூபாய் 1,28,51,000.
(இ) ரூபாய் 37,57,600.

திரு. ஜி. சுவாமிநாதன் : வெளி மாநிலத்திலிருந்து ஏராளமான சீட்டுக்கள் நம்முடைய மாநிலத்தில் விற்றுக்கொண்டிருக்கின்றன. நம்முடைய பணம் வெளி மாநிலத்திற்குப் போய்க்கொண்டிருப்பதால், அதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதில் எந்தத் திட்டவட்டமான கருத்துக்கும் நாம் வருவதற்கு இப்போது முடியாது. நம்மிடமிருந்து மற்ற மாநிலங்களுக்குப் போகிறது. மற்ற மாநிலக்காரர்களும் சண்டை போடுகிறார்கள். பிற மாநிலங்களின் டிக்கெட்டுகள் நம்முடைய மாநிலத்திற்கு வருகின்றன. பொதுவாக இந்தப் பரிசுச் சீட்டு விவகாரத்தில், இந்திய பூ பாகத்தில் தமிழ் நாடு முதல் பரிசை வாங்கிக் கொண்டிருக்கிறது. இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு டில்லியில் பாராளுமன்றத்தில் எந்த ஊரில் இந்தத் திட்டம் நன்றாக நடக்கிறது என்று கேள்வி எழுந்தபோது, தமிழ்நாடு என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் இந்தப் பரிசுச் சீட்டை அந்தந்த மாநிலத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்துக்கொள்ளலாமா என்பதைப்பற்றி தென் மண்டலக் கவுன்சிலின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மீண்டும் இதுபற்றி ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை. விவாத அளவில்தான் இருக்கிறது.

THIRU A.R. DAMODARAN : May I know from the Minister whether the difficulties with the Audit people as to whether this raffle fund should be taken to the Consolidated Fund or whether it should be treated as a separate fund have been resolved and, if so, whether the amount of Rs. 10 crores will be specifically tied to certain projects in our State ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It is accounted for under the Tamil Nadu Special Welfare Fund constituted specially for that purpose.

DEPUTY CHAIRMAN : Question 78 is postponed.

*Muthuraja Community*

*79. —THIRU DEIVASIGAMANI ARUNACHALA DESIKAR (KUNRAKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :

(*a*) whether the Muthuraja Samuha Sangam functioning in Trichi District has requested the Government to declare that the Muthuraja, Mutharaiyar, Valayan Communities which are included in the list of Backward Classes announced by the Government belong to the Muthuraja Community only ; and

(*b*) if so, the action taken thereon ?

[8th September 1970

## முத்துராஜா சமூகம்

திரு. தெய்வசிகாமணி அருணசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்) : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சிராப்பள்ளியில் இயங்கும் முத்து ராஜ சமூக சங்கம், அரசு அறிவித்துள்ள பின் தங்கியோர் பட்டியலிலுள்ள 'முத்து ராஜா' 'முத்தரையர்', 'வலேயன்' ஆகிய அனைவரும் முத்து ராஜா சமூகத்தவரே என்று அறிவிக்கும்படி ஏதேனும் கோரிக்கை அரசுக்கு அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) பிற்பட்டோர் நலக்குழுவின் அறிக்கைக்குப் பின்னர் இது குறித்து ஆராய்ந்து ஆவன செய்யப்படும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : இந்தக் கேள்வியில் 'வலேயன் ' என்ற வகுப்பினரை 'முத்துராஜா' என்ற வரிசையில் சேர்க்க வேண்டு மென்று அந்தச் சங்கம் கேட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். எங்கள் பக்கத்தில் வலேயர் என்று இருப்பவர்கள் அரிஜனங்களைவிட மோசமாக இருக்கிற வகுப்பினராக இருக்கிறார்கள். அவர்களை இதில் சேர்த்தால், அதனுல் இப்போது இவர்கள் பெற்று வருகிற சலுகைகள் குறைந்து விடும் என்று அஞ்சுகிறேன். அதை சர்க்கார் கவனித்து ஆவன செய் வார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : பிற்பட்ட மக்களின் நலனை ஆராய அமைக்கப்பட்டுள்ள மூவர் குழுவின் பரிந்துரை அரசுக்கு வரும்போது, இந்தக் கருத்துக்களை நினைவில் வைத்து பரிசீலனை செய்யப் படும்.

திரு. எம். அய்யாசாமி : இந்தப் பெயரில் குழப்பம் சில சமயங்களில் வருகிறது. மருத்துவர் சமூகத்தைப் பொறுத்தவரையில் சிலர் நாவிதர் என்றும் மருத்துவர் என்றும் குறிப்பிடப்படுகிறார்கள். பள்ளி யில் சம்பளச் சலுகை பெறச் செல்லும்போது, இதில் தகராறு ஏற் படுகிறது. ஆகையால் எந்தப் பெயரில் அது இருந்தாலும், அவர்களை மருத்துவர்களாகக் கருதும் அளவில் அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் களா ?

மாண்பமிகு திரு. என். வி. நடராசன் : மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ள கருத்துக்களை அரசு எந்த அளவுக்கு நிவர்த்தி செய்ய முடியுமோ அதைச் செய்கிறது. நான் முன்பு சொன்னபடி, அந்தக் குழுவின் அறிக்கை வந்த பிறகு, இதுபற்றித் திட்டவட்டமான முடிவை எடுக்கலாம்.